அரசாங்க நிருவாக சுற்றறிக்கை இல. 08/99

எமது இல. ஆ/1V/6/27 (11)
அரசாங்க நிருவாக, உள்நாட்டலுவல்கள்,
பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு -07.
1999.03.18.

எல்லா அமைச்சுக்களின் செயலாளர்களுக்கும்,
மாகாணசபைகளின் பிரதம செயலாளர்களுக்கும்,
திணைக்களத் தலைவர்களுக்கும்,
அரச கூட்டுத்தாபனங்கள்/நியதிச் சட்டசபைகளின் தலைவர்களுக்கும்,

## அரசாங்க நிறுவனங்கள் அமைந்துள்ள வளவுகளினுள் புகைத்தலை தடுத்தல்.

புகையிலை, மதுபானம், மற்றும் சட்டத்திற்குமாறான போதைப் பொருட்கள் பற்றிய ஜனாதிபதி செயலணிக் குழுவினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விதப்புரைகளை கவனத்திற் கொண்டு பின்வரும் நிருவாக ஏற்பாடுகள் உடனடியாக அமுல்படுத்த வேண்டுமென முடிவு செய்யப்பட்டுள்ளது.

1. அனைத்து அரசாங்க நிறுவன வளவுகளினுள், புகைத்தலை தடைசெய்ய வேண்டும்.
2. அந்த நிறுவனங்களின் உண்டிச்சாலைகளில் புகைச்சுருட்கள் மற்றும் புகையிலையுடைய பொருட்கள் விற்பனை செய்வதை நிறுத்த வேண்டும்.
3. அரசாங்க நிறுவனங்கள் அமைந்துள்ள வளவுகளில் புகைத்தலை தூண்டி விடுகின்ற எவ்விதத்திலான பிரச்சாரங்களுக்கும் இடமளித்தலாகாது.
4. புகைத்தலுக்கு உடந்தையாயிருக்கின்ற எவரினது அனுசரணையும் அரசாங்க நிறுவனங்கள் பெற்றுக்கொள்ளுதலாகாது.

02. மேற்படி ஏற்பாடுகளுக்கு அமைவாக செயற்படுத்துவதற்குரிய நடவடிக்கை எடுக்கவும்.

ஒப்பம்/ (பி.ஏ. சேனாரத்ன)
செயலாளர்,
அரசாங்க நிருவாக, உள்நாட்டலுவல்கள்,
பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு.